# 4. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (டான்ஹோடா)

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975ன்படி பதிவு செய்யப்பட்ட அமைப்பு, 2004 –ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் முழு உதவியுடன், மத்திய மற்றும் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டின் கீழ் செயல்படுத்தும் சிறப்பு ஊர்தி ஆக நிறுவப்பட்டது.

**தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

| வ. எண் | திட்டம் | நிதி உதவி (பங்களிப்பு) | |
|---|---|---|---|
| | | மத்திய அரசு | மாநில அரசு |
| 1 | தேசிய தோட்டக்கலை இயக்கம் | மத்திய அரசு 85 % | மாநில அரசு 15% |
| 2 | நுண்ணீர் பாசனத்திட்டம் (சிறு/ குறு)<br>இதர விவசாயிகள் | மத்திய அரசு 50%<br>மத்திய அரசு 40% | மாநில அரசு 50%<br>மாநில அரசு 35% |
| 3. | தேசிய மூங்கில் இயக்கம் | மத்திய அரசு 100% | -- |
| 4. | தேசிய மூலிகைப் பயிர்கள் இயக்கம் | மத்திய அரசு 100% | -- |
| 5. | தமிழ்நாடு நீர்வள– நிலவளத்திட்டம். | -- | மாநில அரசு 100% |
| 6. | மாநில தோட்டக்கலை பண்ணைகள் | -- | மாநில அரசு 100% |

மேலே தெரிவிக்கப்பட்ட வரிசை எண் 5, 6 தவிர அனைத்து இயக்கத் திட்டங்களும் மாவட்ட அளவில் மாவட்ட இயக்கக்குழு / மாவட்ட நுண்ணீர்பாசனக் குழுவின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் செயலர் உறுப்பினர் செயலராக் கொண்டு செயல்படுகிறது.

**1. மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதிபகிர்வுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**1.1 தேசிய தோட்டக்கலை இயக்கம்**

தேசிய தோட்டக்கலை இயக்கமானது மத்திய அரசின் முக்கிய திட்டமாகும். மத்திய மாநில அரசுகளின் 85:15 விகிதாச்சார நிதிப்பகிர்வில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு

வருகிறது. ஒட்டுமொத்த தோட்டக்கலை துறையின் வளர்ச்சியை குறிக்கோளாக கொண்டு அதிக வருவாய் தரும் தோட்டக்கலைப் பண்ணையின் பரப்பினை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் இயங்குகிறது, தேசிய தோட்டக்கலை இயக்கத்திட்டம் 2005–2006ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது,

இத்திட்டம் அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, பெரம்பலூர், புதுக்கோட்டை, திருப்பூர், இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தேனி, திருநெல்வேலி, திருச்சி, வேலூர், விழுப்புரம் ஆகிய 22 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது, அதிக மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் நடவுப்பொருட்கள் உற்பத்தி, பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல், கிளை மேலாண்மை, பசுமைக்குடில் சாகுபடி, இயற்கைப் பண்ணையம், இயந்திரமயமாக்கல், அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை, விற்பனை உள்கட்டமைப்பு ஏற்படுத்துதல் மற்றும் மனிதவள மேம்பாடு, ஆகியன இத்திட்டத்தின் கூறுகளாகும். 2011–2012ம் ஆண்டில் இத்திட்டம் ரூ.6572 இலட்சம் செலவில் 42096 எக்டர் பரப்பில் செயல்படுத்தப்பட்டது, 2012–2013ஆம் ஆண்டில் இத்திட்டம் 50845 எக்டர் பரப்பில் ரூ.15000 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது,

**1.2 தேசிய நுண்ணீர்ப்பாசன இயக்கம்**

நம் மாநிலம் பாசன நீர்ப்பற்றாக்குறை மிகுந்த மாநிலமாகும். வழக்கமான பாசன முறைகள் அதிக நீரை உபயோகிப்பதால் பாசன நீர் விரயத்திற்கு வழிவகுக்கின்றன. நிலமேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் வள ஆதாரங்களை சிறந்த முறையில் உபயோகிக்க நவீன நுண்ணீர்ப்பாசன அமைப்புகளான சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் அமைப்புகளே சிறந்த வழிமுறையாகும். வேளாண் பயிர்களுக்கான பயனாளிகள் வேளாண் துறை மூலமும் தோட்டக்கலைப் பயிர்களுக்கான பயனாளிகள் தோட்டக்கலைத்துறை மூலமும் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். மரப்பயிர்களுக்கான பயனாளிகள் வேளாண் பொறியியல் துறை



மூலமும் கரும்பிற்கான பயனாளிகள் விவசாயிகள் பதிவு செய்துள்ள சர்க்கரை ஆலைகள் மூலமும் தேர்வு செய்யப்படுகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து தோட்டக்கலைப் பயிர்களுக்கும் மற்றும் வேளாண் பயிர்களான கரும்பு, தென்னை பருத்தி, மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் பயறு வகைப்பயிர்களுக்கும் சொட்டு நீர்/தெளிப்பு நீர் அமைப்புகளை நிறுவ சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சத மானியமும் இதர விவசாயிகளுக்கு 75 சத மானியமும் வழங்கப்படுகிறது. இத்திட்டம் பதிவு பெற்ற நுண்ணீர்ப்பாசன நிறுவனங்கள் மூலமே செயல்படுத்தப்படுகிறது. 2011–2012ஆம் ஆண்டில் இத்திட்டம் 27550 எக்டர் பரப்பில் ரூ.8744 இலட்சம் செலவில் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்பட்டது. 2012–13 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 41000 இலட்சம் செலவில் 70000 எக்டர் பரப்பில் செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

**2. மத்திய அரசின் 100 சத நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**2.1 தேசிய மூங்கில் இயக்கம்**

காகித தொழிற்சாலை, வீட்டு உபயோக பொருட்கள், வரைகலை உபயோகம் போன்ற துறைகளில் மூங்கில் ஒரு முக்கிய மூலப் பொருளாகும். சுமார் 1500 பயன்பாடுகளை கொண்ட மூங்கில் விரைவாக வளரக்கூடிய தாவர இனத்தை சேர்ந்தது. மின்உற்பத்தியில் உயரியப்பொருண்மையாக மூங்கிலின் உபயோகம் அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகின்றது. மூங்கிலின் பரப்பு மற்றும் உற்பத்தித்திறனை உயர்த்தும் நெடு நோக்கில் தேசிய மூங்கில் இயக்கம் துவங்கப்பட்டது. 2011–2012ஆம் ஆண்டில் ரூ. 40 இலட்சம் செலவில் 250 எக்டர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2012–13 ஆம் ஆண்டில் 400 எக்டர் பரப்பில் ரூ.70 இலட்ச நிதியில் இத்திட்டம் செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

**2.2 தேசிய மூலிகைப் பயிர் இயக்கம்**

தமிழ் நாட்டில் தற்போது அதிகரித்து வரும் இயற்கை மூலிகைப் பயிர் தாவர பொருட்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், தேசிய மூலிகைப் பயிர் இயக்கத்தின் மூலமாக மூலிகைப் பயிர் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2011–2012**ஆம் ஆண்டில் இத்திட்டம் **3774** எக்டர் பரப்பில் ரூ.**918** இலட்சம் செலவினத்தில் செயல்படுத்தப்பட்டது. **2012–13** ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.**1200** இலட்சம் செலவில் **5000** எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

**3. அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்**

தமிழகத்தில் **49**அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் கீழ் இயங்கி வருகிறது. அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் இனச் சுத்தம் உள்ள நடவு பொருட்களாக முக்கிய பயிர்களில் மா, நெல்லி, சப்போட்டா, கொய்யா, பலா மற்றும் இதர பழப் பயிர்களும் மேலும் அலங்காரச் செடிகள், பணப்பயிர்களான முந்திரி, காப்பி பயிர்களின் நடவுப் பொருட்கள் உற்பத்தி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும். இந்தப் பண்ணைகள் மாதிரி செயல் விளக்க பண்ணைகளாகவும் செயல்படுகிறது. **2011–2012**ஆம் ஆண்டில் **170.45** இலட்சம் நடவுச் செடிகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முழுமையாக சாதனை அடையப்பட்டு உள்ளது. **2012**-2013 ஆம் ஆண்டில் **178** இலட்சம் நடவுச் செடிகளும் உற்பத்தி செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**4. பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள்**

தாவரவியல் பூங்காக்களும், தோட்டங்களும் மாணவர் களின் கல்வி மையங்களாகவும் பார்வையாளர்களை கவரும்படியும் உள்ளன. தமிழ்நாட்டில் 7 பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. இவைகள் அலங்காரப்பூங்கா மற்றும் தோட்டக்கலை செயல்விளக்க மையமாக திகழ்கிறது,



| வ. எண் | தோட்டம் / பூங்கா | பரப்பளவு (எக்டரில்) | பார்வையாளர்களின் எண்ணிக்கை (2010–11) | பார்வையாளர்களின் எண்ணிக்கை (2011–12) |
|---|---|---|---|---|
| 1 | அரசு தாவரவியல் பூங்கா, உதகை | 22.00 | 20,77,610 | 2180409 |
| 2 | அரசு ரோஜா தோட்டம், உதகை | 14.40 | 6,54,751 | 751617 |
| 3 | சிம்ஸ் பூங்கா, குன்னூர் | 12.14 | 5,14,509 | 549320 |
| 4 | காட்டேரி அரசு தோட்டக் கலைப் பண்ணையில் உள்ள பூங்கா | 18.96 | 20.05.2011 அன்று திறக்கப்பட்டது | 8126 |
| 5 | பிரையண்ட் பூங்கா மற்றும் செட்டியார் பூங்கா, கொடைக்கானல் | 8.42 | 5,91,397 | 592858 |
| 6 | அண்ணா பூங்கா மற்றும் ஏரி பூங்கா, ஏற்காடு | 10.00 | 1,83,653 | 370783 |
| 7 | செம்மொழி பூங்கா, சென்னை | 3.17 | 3,89,705 | 441963 |
| | மொத்தம் | 89.09 | 44,11,625 | 4895076 |

**5. பிற நிதி ஆதாரங்களிலிருந்து செயல்படுத்தும் திட்டங்கள்**

**5.1 தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம்**

தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் தோட்டக்கலைத்துறையில் ரூ.**72765** இலட்சம் நிதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது, தமிழ்நாட்டில் **61** உபநதி படுகைகளில் சாகுபடி செய்யப்பட்டு வரும் மிகக்குறைந்த வருவாய் அளிக்கும் பயிர்களை மாற்றி அதிக வருவாயுடன் குறைந்த நீரை மட்டுமே பயன்படுத்தும் தோட்டக்கலைப் பயிர்களை அறிமுகப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்,

முதல் கட்டமாக **2007–08**ம் ஆண்டு, வராகநதி, மேல் வெள்ளாறு, ஆழியாறு, பாலாறு, தெற்கு வெள்ளாறு, பாம்பாறு, மணிமுத்தாறு, கோட்டக்கரையாறு மற்றும் அர்ஜுனா நதி ஆகிய **9** உபநதி படுகைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது,

இரண்டாம் கட்டமாக **2008–09**ம் ஆண்டில் பென்னையாறு சுவேதா நதி, ஆணைவாரி ஓடை, சின்னாறு, அக்னியாறு, அம்புலியாறு, மேல்வைகை, வரட்டாறு–நாகலாறு, தெற்காறு, மேல் குண்டாறு, செங்கோட்டையாறு, சிந்தாப்பள்ளி உப்போடை, கலிங்கலாறு, நிசபநதி, பொய்னி மற்றும் கௌன்டின்யாநதி ஆகிய **16** உபநதி படுகைகளில் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது,

மூன்றாம் கட்டமாக **30** உபநதி படுகைகளான ஆரணியாறு, கொசஸ்தலையாறு, ஓங்குர் நல்லாவூர் துரூஞ்சலாறு, பம்பாறு, திருக்கோயிலூர் கடிலம், மார்க்கண்டநதி, கம்பைநல்லூர், பம்பனாறு–வெரட்டாறு கோமுகிநதி, தேனியாறு, கிருஸ்துமாறு, கானல்ஓடை, லோயர்குண்டார் வேம்பாறு, உத்திரகோசமங்கை, பாலாறு சேவலப்பேரியாறு, தேவயாறு, நாகரியார், வள்ளம்பட்டி, உப்பாத்தூர், கோவிலாறு, உப்போடை, சலிகுலமாறு, கோரம்பல்லம், கருமேனியாறு, வைப்பாறு, அனுமாநதி போன்றவற்றில் உபபடுகைகளிலும் **2010–2011** நீட்டிப்பு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

நான்காம் கட்டமாக **5** உபநதி படுகைகளான அடையாறு. கூவம், செய்யாறு கிளியார், பாளையார் மற்றும் காயல்குடியார் ஆகியவற்றில் **2011–12**ல் செயல்படுத்தப்படுகிறது.



டான்ஹோடாவால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம்.

**( நிதி – ரூ. இலட்சத்தில்)**

| வ. எண் | திட்டத்தின் விபரம் | அளவு | 2011–12 | | | | இலக்கு (2012–13) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி | | பொருள் | நிதி |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1 | தேசிய தோட்டக்கலை இயக்கம் | எக். | 47100 | 42096 | 7294.14 | 6572.00 | 50845 | 15000 |
| 2 | தேசியநுண்ணீர் பாசன இயக்கம் | எக் | 30000 | 27550 | 9687.50 | 8744.00 | 70000 | 41000 |
| 3 | தேசிய மூங்கில் இயக்கம் | எக் | 250 | 250 | 40.00 | 40.00 | 400 | 70 |
| 4 | தேசிய மருத்துவ பயிர் இயக்கம் | எக் | 3774 | 3774 | 918.00 | 918.00 | 5000 | 1200 |
| 5 | அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் | இலட்சம் எண்கள் | 170.45 | 166.27 | 1380.93 | 1103.76 | 178 | 1450 |
| 6 | தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம் | எக் | 8182 | 6562 | 1338.45 | 960.19 | 8258 | 1308 |
| | **மொத்தம்** | | | | **20659.02** | **18337.95** | | **60028** |